மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், போளூர், திருவண்ணாமலை மாவட்டம்.

2023 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 19 ஆம் நாள் செவ்வாய்கிழமை

1873ம் ஆண்டு 11ஆவது ஏற்பாட்டின்படி திருமதி. தீபா, உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதி செய்யப்படுகிறது.

OS.No. 153/2017 வா.சா. 1 என்பவரின் வாக்குமூலம்

| | |
|---|---|
| பெயர் .. அண்ணாதுரை | வயது ..51 |
| த/பெ .. ராஜகோபால் | சாதி .. |
| கிராமம் ..கண்ணனூர் | சமயம் .. |
| தாலுக்கா .. | தொழில் .. |

வா.சா.1 ( குறுக்கு விசாரணை தொடர்ச்சி )

1. அம்மாகண்ணு என்பவர் யார் என்றால் என் தாய் வழி பாட்டி ஆவார். அம்மாகண்ணு அவர்களின் மகள் கன்னியம்மாள் என்னுடைய தாய் ஆவார். அம்மாகண்ணு அவர்களின் மற்றொரு மகள் பெயர் சந்தியம்மாள். கண்ணகவுண்டர் என்னுடைய உறவுக்காரா என்றால் இல்லை. அம்மாகண்ணு மற்றும் கன்னியம்மாள் 07.12.2000 அன்று தாவா சொத்தை கிரையத்திற்கு கொடுத்தார்கள் என்றால் சரிதான். மேற்படி சொத்தை கண்ணகவுண்டர் அவர்களுக்கு கிரையம் கொடுத்த சொத்தை 08.10.2021ல் அன்று நான் கிரையம் பெற்றேன் என்றால் சரிதான்

2. சந்தியம்மாள் அவர்களின் மகன் செல்வம் 06.07.2020 அன்று குண்டாள் என்ற மூன்றாம் நபருக்கு கிரையம் கொடுத்தார் என்றால் எனக்கு தெரியாது. செல்வம் அவர்களுக்கு பாத்தியப்பட்ட 31 3/4 செண்டை குண்டாள் அவர்கஞ்க்கு கிரையம் கொடுத்தார் என்றால் எனக்கு தெரியாது. நான் சென்னையில் கூலிவேலை செய்கிறேன். எனது நிலத்தை என் தந்தை நான் பயிரிட்ட பிறகு பார்த்து கொள்வார். செல்வம் என்வர் என்னுடைய முழு சொத்தையும் கவனித்து வருகிறார் என்றால் சரியல்ல. செல்வம் எனது சித்தி பையன் என்றால் சரிதான்.

3. குண்டாள் என்னுடைய சொந்த மாமா முறை உறவினர் ஆவார். செல்வம் தாவா சொத்தில் 31 3/4 செண்டை அனுபவித்து கொண்டு என்னுடைய சொத்தையும் பார்த்து கொண்டு இருந்தார் என்றால் சரியல்ல. குண்டாள் இறந்துவிட்டார், குண்டாள் அவர்களுக்கு மூன்று மகன்கள், ஒரு மகள் இருந்தார்கள். ஒரு மகன் இறந்துவிட்டார். குண்டாள் அவர்களின் மனைவி பெயர் தனபாக்கியம் என்றால் சரிதான். அவரின் மகள் சகுந்தலா என்றால் சரிதான்.மகன்கள் வெங்கடேசன், மூர்த்தி என்றால் சரிதான்.

4. மேற்படி குண்டாள் அவர்களின் வாரிசுகள் பிரதிவாதி அவர்களுக்கு தாவா சொத்தில் 31 3/4 செண்டை விற்றுவிற்றார் என்ற விவரம் தெரியுமா என்றால் எனக்கு தெரியாது, பிரதிவாதி என்னிடம் தாவா சொத்தில் 31 3/4 செண்டை வாங்கியதாக கூறி பிரச்சனை செய்யும் போது தான் தெரியும். பிரதிவாதி என் மீது சேத்பட் காவல் நிலையத்தில் புகார் அளித்தாரா என்றால் அளித்தார், அதன் பிறகு தான் இந்த வழக்கை தாக்கல் செய்தேன். பிரதிவாதி பயிரிட்ட பயிர்களை நான் சேதம் செய்ததாக புகார் அளித்தார் என்றால் மேற்படி புகாரை அளித்தார் ஆனால் நான் துவரையை அழிக்கவில்லை.

5. கன்னியம்மாள் அவர்களிடமிருந்து நேரடியாகவே தான செட்டில்மெண்ட் பெற்றுஇருக்கலாம் ஆனால் மீதி உள்ள செல்வத்துக்கு சேரவேண்டிய 31 3/4 செண்டை அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தால் பெயரளவில் கண்ணகவுண்டர் பெயரில் எழுதிவிட்டு மறுபடியும் நான் கிரையத்திற்கு பெற்றேன் என்றால் சரியல்ல. கன்னியம்மாள் அவர்களுக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் அவர் சொத்தை விற்றார்.

6. தாவா சொத்தில் எனக்கு முழுமையாக உரிமை இல்லை என்றும், கன்னியம்மாள் மற்றும் சந்தியம்மாள் அவர்களுக்கு மட்டும் தான் உரிமை உள்ளது, அம்மகண்ணு மற்றும் என் தாய் கண்ணகவுண்டர் எழுதிகொடுத்த கிரையப்பத்திரம் செல்லாது என்றும், மேற்படி கிரையப்பத்திரத்தை அடிப்படையாக கொண்டு நான் தாவா சொத்தை பெற்றாது என்று சொன்னால் சரியல்ல.. மேற்படி பிரதிவாதி குண்டாள் வாரிசுகளிடமிருந்து 31 3/4 செண்டை கிரையத்திற்கு பெற்றார் என்றால் சரியல்ல.

7. பிரதிவாதி முறையாக கிரையம் பெற்று தான் பட்டா ஆவணங்கள் பெயர் மாற்றம் செய்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. தாவா சொத்து குறித்து நான என் பெயரில் புதிதாக பட்டா பெற்று நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. 2001 முதல் 2017 வரை நான்

அமைதியாக இருந்துவிட்டு தற்போது பிரதிவாதியிடமிருந்து அவர் சொத்தை அபகரிக்க வேண்டும் என்று இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி நிலத்தில் பயிரிட்ட பயிர்களை நான் டிரக்டர் மூலம் அழித்ததால் இந்த வழக்கு இழப்பீடு உடன் தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

**( குறுக்கு விசாரணை முடிவடைந்தது ).**

*Taken down by me in open Court read over to the witness and acknowledged by him/her to be correct.*

*Sdl/-B.Salma.*

*District Munsif,*

*Polur.*